DMJ COURT KUNNAM

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குன்னம்**

**அசல் வழக்கு எண். 104 /2021**

2025- ஆம் ஆண்டு ஜுன் மாதம் 9 – ஆம் நாள் திங்கள்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியாகிய PW1 - வது நபரின் வாக்குமூலம் (1969- ஆம் ஆண்டின் 54 வது விதியில் 9- வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.கோ.லோகநாதன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மணிமொழி | தொழில் | : | விவசாயம் |
| தகப்பனார்/ கணவர் பெயர் | : | சுப்ரமணியன் | வட்டம் | : | குன்னம் |
| கிராமம் | : | கீழப்பெரம்பலூர் | சமயம் | : | – |
| சாதி | : | – | வயது | : | 74/2025 |

**1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை** :-

1. எனக்கு எழுத படிக்க தெரியுமா என்றால் எழுத படிக்க தெரியாது. வாந் தாக்கல் செய்துள்ள தாவா சொத்தின் சர்வே எண். யூ.டி.ஆர் க்கு முன்பு 206/8 என்றால் சரிதான். சர்வே எண். 206/8 என்பது யூ.டி.ஆர் க்கு முன்பு அதில் 64 சென்ட் இருந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சர்வே எண். 206/8 ல் எனக்கு 16 சென்ட்டில் பாகம் வந்தது. மேற்படி சர்வே எண். 206/8 ல் என் அண்ணன் தம்பிக்கு பாகம் உள்ளதா என்றால் இல்லை. வேறு இடத்தில் அவர்களுக்கு பாகம் இருக்கிறது.

2. சர்வே எண். 206/8 ல் மொத்தம் 64 சென்ட் அதில் ராசாம்பாள் தனக்கு கிடைத்ததை 29.07.1972 ல் ராதாபெரியாசமிக்கு தானசெட்டில்மென்ட் பத்திரம் மூலம் எழுதி வைத்துள்ளார் என்றால் சரிதான். அந்த பத்திரத்தில் 6 சென்ட்டில் 4 சென்ட் என்று எழுதி வைத்திருந்தது என்றால் அது தவறு. சர்வே எண். 206/8 ல் யூ.டி.ஆர் க்கு முன் எனக்கு 16 சென்ட் இருந்ததற்கான ஆவணங்கள் ஏதாவது இருக்கிறதா என்றால் அது பற்றி தெரியாது.

3. எனக்கு பாகம் பிரித்ததற்கான அட்டவணை வழக்கிறஞரிடம் கொடுத்துள்ளேனா என்றால் பாக பிரிவினை அட்டவணை போட்டது உண்மை, ஆனால் வழக்கறிஞரிடம் கொடுத்தேனா இல்லையா என்று எனக்கு தெரியவில்லை. பாகபிரிவினை அட்டவணை போட்டு எனக்கு 16 சென்ட் நிலம் பிரிந்திருந்தது உண்மை என்றால் நான் நீதிமன்றத்தில் அந்த அட்டவணையை கொடுத்திருப்பேன் என்றால், ஞாபகம் இல்லை. 1972 ம் வருடம் எழுதி தானசெட்டில்மென்ட் பத்திரப்படி நாளது தேதிவரை அவர்கள் தான் நிலத்தை அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல.

4. நான் எனது அனுபவத்தை நிரூபிக்க நீதிமன்றத்தில் ஒரு ஆணையர் நியமனத்திற்கு மனு போட்டேனா என்றால் மனு போட்டேன். அளவிற்காக செல்லும்போது மாவட்ட அளவியர் மூலம் தான் அளக்க வேண்டும் என்று ஆட்சேபனை செய்ததன்பேரில் மாவட்ட சர்வேயர் வந்து அளந்தார், என்றால் சரிதான். இதற்கிடையில் நாங்கள் தாக்கல் செய்த ஆணையர் மனுவை திரும்ப பெற்றுக்கொண்டேன் என்றால் சரிதான். மாவட்ட அளவியர் வந்து அளந்ததன்பேரில் உண்மை தெரிந்ததால் தான் ஆணையர் நியமன மனுவை திரும்ப பெற்றுக்கொண்டேன் என்றால் சரியல்ல.

5. நிலம் அளக்கும்போது அவர்கள் அனுபவம் செய்திருந்தார்கள் என்று சொன்னால் எப்போதும் அவர்கள் தான் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் 15 வருடமாக பிரதிவாதிகள் அனுபவம் செய்து வருகிறார்கள். தானசெட்டில்மென்ட் எழுதி நாளிலிருந்து வழக்கு சொத்தை பிரதிவாதிகள் தான் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் யூ.டி.ஆர்க்கு முன்பு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

6. யூ.டி.ஆரக்கு பின்பு எல்லையை என் பெயரில் ஏற்படுத்திக்கொண்டு வீண் இடையூறு செய்கிறேன் என்றால் சரியல்ல. சர்வே ண். 206/8A3 ல் உள்ள நிலம் பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்றும், தானசெட்டில்மென்ட் பத்திரம் மூலம் எழுதி வாங்கிய நாளிலிருந்து இன்று வரை பிரதிவாதிகள் தான் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. சர்வே ண். 206/8A3 பிரதிவாதிகள் நிலமே இல்லை என்று வழக்குரையில் கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் என் இடத்தில் பிரதிவாதிகள் எந்த அத்துமிறலும் செய்யவில்லை என்றால் சரியல்ல.

7. நீதிமன்ற ஆணையர் அறிக்கை கொடுத்திருந்தால் அத்துமீறி இருக்கிறார்களா அல்லது ஆக்கிரமிப்பு செய்து இருக்கிறார்களா என்று உண்மை தெரிந்திருக்கும் , பிரதவிாதிகள் எதுவும் செய்யாததினால் தான் நான் மனுவை திரும்ப பெற்றுக்கொண்டேன் என்றால் சரியல்ல. சர்வேண். 206/8A2  டூ சர்வே ண். 206/8A3 இதற்கிடையில் தான் அளவு பிரச்சனை உள்ளது என்றும் சர்வே ண். 206/8A3 ல் பிரதிவாதிகள் 4 சென்ட்டில் குப்பை கொட்டி அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல.

8. நான் வழக்குரையில் கேட்டுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. மீட்டர் கணக்கு ஏர்ஸ் கணக்கு எல்லாம் யூ.டி.ஆர்க்கு முன்பு இல்லை என்றாலும், யூ.டி.ஆர்க்கு முன்பு சென்ட்டும் அடி கணக்கும் இருந்தது என்றாலும் அதன்படி யூ.டி.ஆர்க்கு முன்பு பத்திரத்தில் 4 சென்ட் எழுதப்பட்டிருந்தது அதன்படி தான் பிரதிவாதிகள் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. அப்போது மீட்டர்தான் இருந்தது. தற்போது கூட நான் நீதிமன்றத்தில் கமிஷன் மனு தாக்கல் செய்து நிலத்தை அளந்து பார்தால் தெரியவரும் என்றால் சரியல்ல.

**(1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணையில் 4-வது பிரதிவாதி இதையே ஏற்று அனுசரிக்கிறார். )**

Taken Court by in Open Court read and to the witness and admitted by the witnesses to be correct.

District Munsif - Cum - Judicial Magistrate,
Kunnam.

DMC JUDICIAL COURT, KUNNAM